உங்கள் சகல விதமான வாகன உதிரிப் பாகங்களுக்கும் சேவைகளுக்கும் நம்பிக்கையான இடம்
VEE KAY AUTOS
Parts & Services
M.O.T. While - U - Wait
Parts: 081 - 806 2294/5, 76, Stamford Hill, London N16
Services: 081 - 806 1965, 48, Belfast Road, London N16

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# அகதி

TAMIL REFUGEE CENTRE

சட்டத்தரணிகளின் தேவைக்கு
SOORII & MEHALA
(SOLICITORS)
1st Floor, 229 Upper Tooting Road, London SW 17
Tel: 081 - 767 9666
For Advice & Assistance on all Immigration matters
Also: * Criminal, Civil & Matrimonial Litigation * Conveyancing
* Liquor Licencing * Wills & Probate
* Police Station Advice & Assistance
* Legal Aid

இலண்டன் முருகா - நீ அருள்வாய்



இலண்டன் முருகனின் வருடாந்த தேர் உற்சவத்தின் போது சுவாமி வீதி வலம் வரும் காட்சி

சந்திக்கு வராத சங்கதிகள்

ஸ்பெசல் றிப்போட் உள்ளே...

1. சிங்கப்பூர் மலேசியாவில் தமிழ் அகதிகளின் அவலம்
2. உருக்குலைந்த....... திருமலை

## 92-93 இல் 3,200 தமிழ் அகதிகளுக்கு நிரந்தர விசா

இந்நாட்டில் இதுவரை தஞ்சம் கோரி விண்ணப பம் செய்திருக்கும் சுமார் 15,000 தமிழ் அகதிகளில 3,200 பேருக்கு அடுத்த வருடம் முடிவடைவதற் குள் பிரித்தானியாவில் கால வரையின்றி வசிப்ப தற்கு விசா வழங்கப்பட இருக்கிறது.

அகதி அந்தஸ்து வழங்கப்படாத 99 வீத மான தமிழ் அகதிகளின் நிலை பிரித்தானியாவைப பொறுத்த மட்டில் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. தஞ்சம் கோரியோர் சம்பந்தமாக காலத்துக்குக் காலம் இந்நாட்டு அரசு கொண்டு வரும் சட்டமூலங்களினால் தமிழ் அகதிகளின் எதிர்காலம் நிச்சயமற்ற தாகவே இருக்கிறது. கடந்த 7 - 8 வருடங்களாக இந்நாட்டில் வாழ்ந்து வரும தமிழ் அகதிகளின் விடயத்தில் இன்னமுமொரு நிரந்தரமான கொள்கையை பிரித்தானிய அரசு கடைப் பிடிக்கவில்லை.

இலங்கையில் உள்ள நிலைமையும் தஞ்சம கோரியோர் இந்நாட்டில் தொடர்ந்து வாழ்ந்த காலத்தையும் கவனத்தில் கொண்டு வரையறுக் கப்பட்ட காலத்திற்கான விசாக்களை வழங்கி வருகின்றது. இதனால் இந்நாட்டில் கிடைக்கக்கூடிய வசதிகளைப் பெறுவதிலோ அல்லது நிரந்தரமான நிச்சயமான வாழ்க்கையைத் தொடங்குவதிலோ

தொடர்ச்சி மறு பக்கம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AHATHY

ஆகஸ்டு - செப்டம்பர் 92     பிரசுரம் - 3

அகதியின்

## எண்ணத்தில்

அண்மைக்காலமாக வெளிநாடுகளை நோக்கி ஏராளமாகப் புறப்பட்ட ஈழத்தமிழர்கள் தங்கள் பிரயாணத்தைத் தொடரமுடியாமல் உலகின் பல்வேறு நாடுகளிலும் நிர்க்கதியாக இருக்கும் தகவல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. தமிழ் அகதி நிலையத்தின் முயற்சியில் அண்மையில் மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக் ஆகிய இடங்களுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட நிலையத்தின் ஆலோசகர் வெளியிட்டுள்ள தகவல்கள் மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது.

தாங்கள் செல்வதற்கென ஆரம்பித்த பயணத்தை முடித்து விட்டவர்கள் நிம்மதியடைகிறார்கள். அதேவேளை நடுவழியில் நிர்க்கதிக்குள்ளானவர்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இவ்வகதிகளை அனாதைகள் ஆக்கியவர்கள் தமிழரகளே என்பதை நினைக்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

தமிழ் அகதிகளுக்கு வெளிநாடுகளில் உதவி புரியும் அமைப்புக்கள் இவர்களுக்கும் ஏதாவது உதவி செய்ய முன்வர வேண்டும்.

---

## கோவை மகேசன் மறைவு

சுதந்திரன், வீர வேங்கை ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியரும் தமிழினத்திற்காக இரவு பகல் எனப்பாராது உழைத்தவருமான திரு கோவை மகேசனின் மறைவுக்கு ' அகதி " தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றான்.

---

அகதி ஆக்கம்
திரு கே.பி.சோமசுந்தரம், திரு கே.கனகசூரியம்
திருமதி பி. செல்வநாதன் செல்வி பி.நடராஜா
திரு பி. இளவழகன்

பிரசுரிப்போர்
தமிழ் அகதி நிலையம்
256, Fore Street
Edmonton, London N18 2TY
Tel: 081 - 887 0644

தமிழ் அகதிகளுக்குப் பெரும் விரக்தியான நிலையே இருந்து வந்துள்ளது. உள் நாட்டு அலுவலகத்தின் புள்ளி விபரப்படி இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை சுமார் 15,200 தமிழர்கள் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்துள்ளார்கள். இவர்களில் இது வரை 100 க்கும் குறைவானவர்களுக்கு மாத்திரமே அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 5,700 பேர் வரை குடிவரவுக்குப் புறம்பாக விசாவைப் பெற்றுள்ளனர். இவ்வாறு விசா வழங்கப்பட்டவர்களில் 3,200 பேருக்கு அடுத்த வருடம் முடிவடைவதற்கு முன் நிரந்தரமான வாழ்க்கையைத் தொடங்குவதற்குரிய விசாவை வழங்கவிருக்கிறது.

## தஞ்சம் கோரிய தமிழர் தொகையில் வீழ்ச்சி

கடந்த வருடம் முதல் மூன்று மாத காலத்தில் சுமார் 1,100 தமிழர்கள் பிரித்தானியாவில் தஞ்சம் கோரி விண்ணப்பித்து இருந்தார்கள். சென்ற ஆண்டு டிசம்பர் வரை தஞ்சம் கோரியோர் தொகை 3,700 பேர் ஆகும்.

இந்த வருடம் முதல் மூன்று காலத்தில் விண்ணப்பம் செய்தோர் தொகை 270 பேர் மாத்திரம் என தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொகை சென்ற ஆண்டையும் விட சுமார் 60 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

## திரு கே.கனகசூரியம் நியமனம் பெற்றார்

தமிழ் அகதி நிலையத்தின் ஸ்தாபக உறுப்பினரும் அகதி பத்திரிகைக்குழுவின் உறுப்பினருமான திரு கே.கனகசூரியம் பிரித்தானியா அகதிகள் பணியகத்தின் வேலை வாய்ப்பு அலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முழு நேர பதவியைப் பெற்றிருக்கும் இவர் தமிழ் அகதி நிலையத்தினால் நடாத்தப்படும் இலவச ஆங்கில வகுப்புக்களுக்குப் பொறுப்பாக மட்டுமன்றி இந்நிலையத்தினால் நடாத்தப்படும் பிரித்தானியாவில் வாழும் தமிழ் அகதி ஆசிரியர்கள் பற்றிய மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பாகவும் கடமையாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**விமர்சனங்கள்**

வாசகர்களிடம் இருந்து விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▼ சட்ட விரோத செயல்களினால் மறியல்! ▼தெருவுக்குத் தெரு திடீர் ஏஜென்சி!

# சிங்கப்பூர், மலேசியாவில் தமிழ் அகதிகள் அவலம்

ஸ்பெசல் றிப்போட் – 1

**வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் அனர்த்தங்களினால் தம்முயிர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் உலகின் எநத மூலையிலாவது ஒதுங்கி விட வேண்டுமென்று புறப்பட்ட பெருந்தொகையான தமிழ் அகதிகள் சிங்கப்பூர், மலேசியா, பாங்கொக் போன்ற நாடுகளில் குவிந்துள்ளனர். பசி, பட்டினியாலும் இருப்பிட வசதியின்மையாலும் நிர்க்கதியாக்கப்பட்ட செய்திகள் அண்மைக் காலங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இம் மக்களின் உண்மை நிலையினை நேரடியாக அறிந்து கொள்வதற்காக தமிழ் அகதி நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க நிலையத்தின் ஆலோசனைச்சபை உறுப்பினரும் பிரித்தானிய அகதிகள் பணியகத்தைச் சேர்ந்தவருமான திரு போல் சத்தியநேசன் மேற்படி நாடுகளுக்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தார். சுமார் 6 வார காலம் அந்நாடுகளில் தங்கியிருந்து தனது அறிக்கையைத் தமிழ் அகதி நிலையத்திற்குச் சமர்ப்பித்திருந்தார்.**

## அறிக்கையின் விபரம்

சிங்கப்பூர், மலேசியா, பாங்கொக், ஆகிய நாடுகளைப் பொறுத்த வரை இலங்கையில் இருந்து புறப்படுபவர்கள் எந்தத் தடையுமின்றி நுழையக்கூடிய நாடுகளாக இருந்து வருகிறது. இலங்கையில் இருந்து புறப்படும் ஒருவர் சில மணி நேரத்திற்குள் இந்நாடுகளுக்கு வந்து சேர முடியும். விமான நிலையத்தில எந்த நாட்டுக்குரிய கடவுச்சீட்டு வைத்திருந்தாலும ஒரு குறிப்பிட்ட கால விசாவை எந்த வித கெடுபிடியும் இல்லாமல் பெற்றுக் கொள்ளலாம். இவர்களை அனுப்பும் அல்லது கூட்டிக் கொண்டு வரும் அல்லது பொறுப்பெடுக்கும் ஏஜென்சிகள் எப்படியாவது சமாளித்துக் கொண்டு விடுதிகளை ஒழுங்கு செய்து விடுகிறார்கள். மேற்கத்திய, குறிப்பாக கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளுக்கு அனுப்புவதாக பல ஆயிரக்கணக்கான பணத்தைப் பெற்றுக கொண்டு சில சந்தர்ப்பங்களில் அவர்களின கடவைச் சீட்டு போன்ற தஸ்தாவேஜுக்களையும் பெற்றுக் கொண்டு தலைமறைவாகி விடுகின்றனர். உறவினர்களோ அல்லது நண்பர்களோ இல்லாத இவர்கள் நிர்க்கதியாகி விடுகின்றார்கள். உணவு உடை இருப்பிடம் என்பன அற்ற ரீதியிலும் இந்நாடுகளில் தொடர்ந்து வாழ்வதற்கு உரிய சட்டபூர்வமான விசாவும் இல்லாத நிலைமையில் பல நூற்றுக்கணக்கானோர் விபரிக்க முடியாத துயர சூழலில் நடமாடுவதை நேரடியாகக் கவனிக்கக கூடியதாக இருந்தது. வெளிநாடுகளுக்குப புறப்பட்டவர்கள் தாம் அங்கு போக முடியாததை உணர்ந்ததும், தங்களின் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்காக இவர்களின் ஒரு பகுதியினர் திடீர் ஏஜென்சிகளாக மாறி பின்ப வருவோரை ஏமாற்றுகிறார்கள். பல இளம் தமிழ்ப பெண்கள் வேறு வழியின்றி விபச்சாரத்தில் ஈடுபடுவதையும் வேறு பலர் இவர்களை ஈடுபடுத்துவதையும் நான் நேரடியாகக் காணக்கூடியதாக இருந்தது. சிங்கப்பூரில் சிரங்கூன் என்னும் இடத்தில பெருந்தொகையான இலங்கை அகதிகள் இருக்கின்றனர். இங்குள்ள பல விடுதிகளில் சுகாதார வசதியோ அல்லது காற்றோட்ட வசதியோ அன்றி சிறு அறைகளில் அளவுக்கு அதிகமானோர் மிருகங்களை அடைத்திருப்பது போல் இருக்கின்றார்கள். இவர்கள் சட்டப்படி தங்கள் நிலைமைகளை வெளியில் சொல்ல முடியாத சந்தர்ப்பத்தைப் போலி ஏமாற்று ஏஜென்சிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்நாடுகளில் இருக்கக்கூடிய அனுமதி விசா முடிவடைந்தும் சிங்கப்பூர் மலேசியா என்று அங்கும் இங்குமாக அலைந்து திரிகிறார்கள்.

சிங்கப்பூர் பிரஜைகளுடன் சேர்ந்து சட்டவிரோத செயல்களான விபச்சாரம், போதை வஸ்து கடத்தல், களவு போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் பல தமிழர்கள் பல வருடங்களாக மறியலில் இருக்கிறார்கள். சிங்கப்பூர், மலேசிய தமிழர்கள் தமிழ் விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக பல சங்கங்களையும் அமைப்புகளையும் நிறுவி இருக்கிறார்கள். ஆனால் இங்கு இவ்வாறு கஸ்டப்படும் இலங்கைத் தமிழ் அகதிகளைக் கண்டும் காணாமல் ஒரு தீண்டத் தகாத குற்றம் புரிந்தவர்களாகக் காண்கிறார்கள். இவ்வாறான நிலைக்கு இந்தத தமிழ் மக்களை ஆக்கியது தமிழர்களே என்பது வேதனைக்குரியது. குறிப்பாகக் கனடாவில் வாழும் இலங்கைத்தமிழர்கள் அனேகமானோர் இப்படியான ஏஜென்சி வேலைகளில் ஈடுபட்டு இவர்களை மோசடி செய்து இந்நிலைக்கு உள்ளாக்கி இருக்கிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. கனடா கடவுச் சீட்டுக்களைக் காட்டி மக்களை நம்ப வைத்து அவர்களுடைய பணத்தைக் கவர்ந்து கொண்டு நட்டாற்றில் தவிக்க விட்டுச் சென்று விடுகிறார்கள்.

மலேசிய நாட்டைப் பொறுத்த வரை கிட்டத்தட்ட 2,000 தமிழ் அகதிகள் வரை இவ்வாறு இருக்கிறார்கள். அங்கு சிங்கப்பூரை விடக் கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு காலம் விசாவைப் பெற முடிகின்றது. இங்கு பலர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று தொழில புரிகின்றனர்கள். அதே வேளை மலேசியாவில் வந்து வேலை பெற்றுத் தருவதாக அழைத்து வந்து ஏமாற்றப் பட்டுத் தெருக்களில் திரியும தமிழர்களையும் நான் நேரில் கண்டேன். பல ஏஜென்சிகள் கொழும்பில் இருந்தும் கூட மலேசியா, சிங்கப்பூரில் வேலை பெற்றுத் தருவதாக அழைத்து வந்து அவர்களையும் இந்த அகதிகளுடன் சேர்த்திருக்கிறார்கள்.

பாங்கொக் நாட்டில் சுமார் 500க்கும் மேற்படாத தமிழ் அகதிகளே இருக்கிறார்கள். இங்கு பாசைப்பிரச்சனை இருப்பதால் அதிக நாட்கள் தொடர்ந்து இருக்காமல் சிங்கப்பூர் மலேசியா நாடுகளுக்கு அடிக்கடி பிரயாணம் செய்து கொண்டு இருக்கிறார்கள். மலேசியாவில் கஸ்டத்திற்கு உள்ளாகி இருக்கும் தமிழர்கள் பற்றி அங்குள்ள இலங்கை உயர் ஸ்தானிகர காரியாலயத்தில் பல தமிழர்கள் முறைப்பட்ட போது திரும்பவும் கொழும்புக்குத் திரும்பும்படி ஆலோசனை கூறப்பட்டதே தவிர வேறு எவ்விதமான ஆக்கபூர்வ மான உதவிகளையும் செய்ய முன்வரவில்லையென எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

எனது விஜயத்தின் போது அகதிகளுக்காகக கடமையாற்றும் சர்வதேச ஸ்தாபனமான UNHCR ஐச் சந்தித்து இவர்கள் பற்றி எடுத்துக் கூறினேன். இந்தக் காரியாலயங்களில் கடமையாற்றுவோர தமிழர்கள் இங்கு வந்து இந்நிலைமைக்குள்ளாகியிருக்கி றார்கள் என்பதைத் தெரிந்தவர்கள் போலக் காட்டிக கொள்ள மறுத்து விட்டார்கள். மேலும் ஆகப் பத்து வீதத்திற்குக் குறைந்த இலங்கைத் தமிழர்களே தங்களின் உதவியை நாடி வந்ததாகத தெரிவித்தார்கள். அவ்வாறு வந்தவர்களின விபரங்களைச் சேகரித்து அவர்கள் தகுதியான அகதிகளா என்பதைக் கண்டு கொள்ள திரும்பவும இலங்கைக்குத் தெரியப்படுத்துவதை நான் மிகவும வன்மையாகக் கண்டித்ததுடன் இந்நடவடிக்கையைத தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டாமெனக கேட்டுக் கொண்டேன். நீண்ட நாட்கள் தொடர்ந்து இந்த அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து இத்தமிழ் அகதிகளை மிகவும் மனிதாபிமா னத்துடன் நடத்துவதாக ஏற்றுக் கொண்டார்கள்.

நான் சந்தித்த பல அகதிகளிடம் இது பற்றி எடுத்துக் கூறி எங்களால் சேகரிக்கக்கூடிய விபரங் களைத் திரட்டி தாங்கள் உண்மையான அகதிகள் என்றும் இலங்கைக்குத் திரும்பினால் தங்கள் உயிருக்கு ஆபத்து என்பது போன்ற அத்தாட்சி களை UNHCR காரியாலயங்களுக்கு சென்று பதிவு செய்யும் படி கேட்டுக் கொண்டேன். இவ்வாறு பதி யப்படுகின்றோர்கள் அகதிகளாக ஏற்றுக் கொள்ளப் பட்டு UNHCR இன் பராமரிப்பின் கீழ் வைக்கப்படு வார்கள். அதேவேளை இவர்களுடைய உடனடியான குடும்ப உறவினர்கள் பிரித்தானியா, கனடாவில வாழ்ந்தால் அவர்களுடன் தொடர்பு கொண்டு அந்த நாடுகளுக்கு அழைத்து வருவதற்கு அந நிறுவனம் ஆவன செய்யும்.

கடைசியாகப் பிரித்தானியாவில் வாழ்கின்ற தமிழர்களின் உடனடியான உறவினர்கள் யாராவது சிங்கப்பூர் மலேசியாவில் இந்நிலைக்கு ஆக்கப்பட்டிருந்தால் அவர்கள் இங்குள்ள UNHCR அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தேவையான உதவிகளைச் செய்ய முடியும்.


# துவாரகா

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட

* பலசரக்கு உணவுப்பண்டங்கள்
* குளிரூட்டப்பட்ட பண்டங்கள்
* தகரத்தில் அடைக்கப்பட்ட பொருட்கள்
* வார, மாதப் பத்திரிகைகள்,
* சஞ்சிகைகள் உட்பட

உங்களுக்குத் தேவையான சகல விதமான பொருட்களுக்கும் நம்பிக்கையான சிறந்த ஸ்தாபனம்

## துவாரகா

199 The Broadway
Southall, Middlesex
Tel: 081 - 813 9126

எம்மிடம் தலைப்பாகை, சர்வாணி, தலை நகைகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

வாரத்தில் முழு நாட்களும் வியாபாரத்திற்குத் திறக்கப்படும்

# PIANO LESSONS

QUALIFIED TEACHERS
MRS. QUNEE DAWSON
&
MRS. ROHINI MAHESAN
GIVE PIANO LESSONS
FOR BEGINNERS.

CHILDREN AGE 5+ & ADULTS ARE WELCOME

CONTACT
081 - 472 6477
1, THORPE ROAD
EAST HAM LONDON E6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய ராச்சியத்தின் (U.K.) குடிவரவு விதிகள்

எம்..மார்க்கண்டன் LLB

இங்கிலாந்து தேசத்தில் குடிவரவு குடியகல்வ எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை அறிந்திருப்பது தற்போதைய சூழ்நிலையில் இன்றி யமையாததாகும். இக்கட்டுரையானது சட்ட நுணுக கங்களை நுண்ணி ஆராயாமல் சாதாரண மக்களுக்கு விளங்கக் கூடிய முறையில் அமைந்துள்ளது. ஐக்கிய இராச்சியத்துக்குள் வெளி நாட்டவர்கள் பல வகை யில் உட்புகுவதற்கு வசதிகள் உண்டு. அதாவது உல்லாசப் பிரயாணிகளாகவோ மாணவர்களா கவோ வேலை வாய்ப்புப் பெற்று வருபவர்களா கவோ வர்த்தகர்களாகவோ அல்லது அகதிகளா கவோ உள்வர முடியும். அதிலும் சில நாட்டவர்கள் அனுமதிப்பத்திரம் எதுவும் இன்றி இங்குள்ள விமான நிலயம் அல்லது கடல் இறங்கு துறையில் வந்து இறங கி உட்புகுவதற்கு விண்ணப்பிக்கலாம். சாதாரண மாக மற்றைய நாட்டவர்கள் தத்தமது நாட்டில் உள்ள பிரித்தானிய தூதரகத்தில் Entry clearance Certificate or Visa பெற்ற பின்பே தமது பிரயாணத் தை ஆரம்பிக்கலாம். Visa எடுப்பதற்குச் சில அத்தியாவசியமான தேவைப்பாடுகள் பின்வரு மாறு

## மாணவர்கள் Student Visa

1. தமது நாட்டில் கற்பதற்கு வசதியில்லாத ஒரு Course இற்காக முழுப்பணமும் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

2. இந்த நாட்டில் ஏற்படக்கூடிய செலவுகள் அனைத திற்கும் உத்தரவாதம் செய்யும் ஒரு Sponser தேவை.

3. வதிவிட வசதியை இலவசமாக வழங்க ஒரு வீட்டுச சொந்தக்காரரின் அத்தாட்சிப் பத்திரம் தேவை.

4. உத்தரவாதி ( Sponser ) கல்வி முடித்தவுடன சொந்த நாட்டுக்குத் திரும்புவார் என்ற ஒரு உத்தர வாதக் கூற்று.

## பார்வையாளர்கள் Visitors Visa

இவர்களை சில உபபிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. உறவினர்கள், நண்பர்களைச் சந்திகக வருபவர்கள்
2. உல்லாசப் பயணிகள்
3. வர்த்தகம் சம்பந்தமாகப் பிரயாணம் செய்வோர்
4. வைத்தியம் செய்வதற்காக வருவோர்

இவர்கள் இந்த நாட்டுக்கு வருவதற்கான அனும தியைப் பெறுவதற்கு இந்த நாட்டில் இவருக்கு ஏற்படக்கூடிய அனைத்துச் செலவுகளையும் வதிவிட வசதிகளையும் கொடுக்கக்கூடிய ஒரு உத்தரவாதி தேவையாகும். அதே நேரம் இவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு முயற்சிக்க மாட்டேன் என்றும் தனது நோக்கம் தான் வந்த தேவையை முடிந்தவுடன் தமது நாட்டிற்குத் திரும்புவேோம் என்று உத்தரவாதமளிக்க வேண்டும்.

## தொழில் வாய்ப்புப்பெற்று வருவோர்

இந்த நாட்டில் அத்தியாவசியமாகத் தேவைப்படு கின்ற சில குறிப்பிட்ட வேலைக்கு மாத்திரம பிறநாட்டவருக்கு வேலை செய்யும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். தொழில் வழங்கும் நிறுவனமே அவர் இங்கு வசிப்பதற்கான வதிவிட வசதி மற்றும் சில அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்து கொடுக்கும். இப்படி வருவோருக்கு ஆரம்பத்தில் 12 மாத கால அனுமதி வழங்கப்பட்டு பின்னர் 4 வருடம் தொடர்ந்து இருந்தால் அவர் இங்கு நிரந்தர மாக வாழுவதற்கு உரிமை வழங்கப்படும். முக்கிய மாக வைத்தியரகள், பல வைத்தியர்கள், தாதிமார கள், பிரத்தியேக வீட்டுப் பணியாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள் போன்றவர்களே இப்படி வருவ தற்கு அனுமதியளிக்கப்படுவார். இஙகிலாந்தில இப்பொழுது உள்ள கறுப்பின மக்களின் மூதாதை யர்கள் ஆரம்பத்தில் சுரங்கத் தொழில் செய்வதற் காக ஆரமபத்தில் ஆபிரிக்க நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டவர்களே ஆவார்.

## வியாபாரமும் சுய தொழில் செய்வோரும்

£ 200,000 பணத்தைதம் நாட்டில் இருந்து கொண்டு வந்து இந்த நாட்டில் தொழிலை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படும். இத்தகைய அனுமதி தூதரகங்களில் வழங்கப்படுவது இல்லை. இங்கிலாந்தில் உள்ள Home Office இல் வழங்கப்படும். ஆரம்பத்தில் 12மாதங்களுக்கு வழங கப்பட்டுப் பின்னர் நிரந்தரமாகவே வழங்கப்படும்.

## குடும்பம் ஒன்று சேர்தல் Family Re Union

மேலே குறிப்பிட்ட Visitors தவிர்ந்த ஏனைய வகையினரின் துணைவர்களும் தங்கி வாழ்பவர்களும் (dependants) இந்த நாட்டிற்குத் தங்கள் துணைவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக வருவதற்கு அனுமதி வழங்கப்படுவார்கள். அவர்களுடைய அனுமதி Visa துணைவர்களின் அனுமதி காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். வழமையான Sponser ship and Accomodation letter தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

தொடர்ச்சி மறுபக்கம்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் பக்கத் தொடர்ச்சி

## துணைவர்களுடன் நிரந்தரமாகக் குடியேறல்

இந்த நாட்டில் நிரந்தரமாக வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் துணைவர்கள் இந்த நாட்டிற்கு வந்து நிரந்தரமாக வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் துணைவர்கள் இந்த நாடடிற்கு வந்து நிரந்தரமாக வசிப்பதற்கு பின்வரும தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

1. துணைவருக்கு நிரந்தர வசிப்புரிமை இருக்க வேண்டும்.

2. இத்திருமணம் இந்த நாட்டிற்குள் வருவதற்கான ஒரு நோக்கத்தை கொண்டிருத்தல் ஆகாது. அத் துணைவர்கள் இருவரும் நிரந்தரமாக ஒன்று சேர்ந்து வாழும் எண்ணம் கொண்டிருத்தல் வேண்டும்.

3. சம்பந்தப்பட்டவர்கள் ஏற்கனவே சந்தித்து இருக்க வேண்டும்.

4. குடியிருப்பு வசதி இருக்க வேண்டும்.

5. முழுக் குடும்பத்தையும் பராமரிக்கக்கூடிய வருவாய் இருக்க வேண்டும். இந்தத் தேவைப்பாடு களைப்பூர்த்தி செய்தால் ஏற்கனவே திருமணம் முடிந்தவர்களும் இங்கு வந்து திருமணம் முடிக்க விண்ணப்பிப்போருக்கும் அனுமதி வழங்கப்படும்.

இந்தத் தலைப்பின் கீழ் அனுமதி பெறுவது கஸ்டம். ஏற்கனவே திருமணம் ஆகிப் பிள்ளைகள் உள்ளோருக்கு பிரச்சனைகள் குறைவு. ஆனால் புதிதாகத திருமணம் செய்வதற்கும் இனிமேல் திருமணம செய்வதற்கு விண்ணப்பிப்போருக்கும் அனுமதி கிடைப்பது வெகு அபூர்வம். ஏனெனில் இந்நாட்டுப பல நீதி மன்றத் தீர்ப்புக்களில் திருமணம் செய்தோரின் முதற் கண் நோக்கம் (Primary ) இங்கிலாந்தில் அனுமதி பெறுவதற்காகவே என்பது ஒரு சட்ட ஊகம் என்பதுவும் அதை எதிர் நிருபிக்கும பொறுப்பு விண்ணப்பதாரியைச் சாரும். இதனால் இன்று எத்தனையோ இக்குடும்பங்கள் ஒன்று சேர முடியாமல் தவிக்கின்றன.

## மேன் முறையீடு (Appeal)

இந்த நாட்டில் மேன்முறையீடு செய்வதற்கான வசதியுண்டு. இங்கு யாராவது Entry clearance Certificate எடுக்கத் தேவையில்லாதவர்கள் Airport இல் அனுமதி மறுக்கப்பட்டால் அவர்கள உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள். தற்காலிக தங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டு கீழ் வரும் படிமுறையில் அமைந்து மேன்முறையீடு செய்ய உரிமை உண்டு.

Adjudicator Tribunal Court of Appeal European Court of Human Rights

இந்நாட்டுக்குள் உட்புகுவதற்கு அவர்களின் நாட்டில் விசா பெற்று வர வேண்டியவர்கள் (Visa Nationals) Visa or Entry Clearance Certificate பெறுமல் வரும் பட்சத்தில் தம் நாட்டிற்குத் திரும்பிச சென்று அங்கிருந்து தான் மேன் முறையீடு செய்ய முடியும். அகதிகள் தமக்குரிய ஆதாரங்கள (Documents) இல்லாமல் வரும் காரணத்தால அவர்களுக்கு மேன் முறையீட்டு உரிமை வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக Exceptional Leave வழங்கப்படும்.

அடுத்த இதழில் முடியும்...................

---

## இன்று கேட்கும் விபுலானந்த குரல்

திரு செ.யோகநாதன் எழுதிய சுவாமி விபுலானந்தர் பற்றிய " இன்று கேட்கும் விபுலானந்தர் குரல்"" என்ற நூல் வெளியீட்டு விழா சென்ற 12..7.92 அன்று ஈஸ்ட்ஹாம் தமில் இல்லத்தில் லண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட போது தமிழ் அகதி நிலையத்தின ஆலோசனைச் சபை உறுப்பினர் திரு வீ. சங்காரவேல் அவர்கள் உரையாற்றிய போது எடுக்கப்பட்ட படத்தை கீழே காணகிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தமிழர்கள் மீளக்குடியமரப் பாதுகாப்பில்லை *திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்குப் பாதுகாப்பு

# உருக்குலைந்த..... திருமலை

## ஸ்பெசல் றிப்போட் -2

கிழக்கு மாகாணத்தில் திருமலை மாவட்டத்தில இருக்கும் ஹபரணையில் இருந்து திரியாய வரைக்கும் வெருகல் தொடக்கம் முள்ளிப்பொத தானை வரையுமுள்ள நிலப்பரப்பு மனிதர்கள இல்லாத வனாந்தரப்பிரதேசங்களாக காட்சி அளிப்பதாக நேரடியாகக் கண்டு வந்தவர்கள் தந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கந்தளாய், தம்பலகாமம், நிலாவெளி, குச்சவெளி, திரியாய், கன்னியாய் போன்ற தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த தமிழர் பூமி இன்று அரச பயங்கரவாதத்தினால் நிர்மூலமாக்கப்பட்டு சிங்கள இராணுவத்தின் பாரிய அளவிலான பாதுகாப்புடன் திட்டமிட்ட சிங்களப் குடியேற்றங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

அங்கு வாழ்ந்த பெரும்பான்மையான தமிழ மக்களுக்கு என்ன நடந்தது என்பது எவருக்கும புரியாத புதிராக இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆங்காங்கு அமைந்துள்ள அகதி முகாம்களில் இருக்கின்ற தமிழ் மக்கள் கூட நாளாந்தம் காணமல் போகும் நிலை உருவாகி உள்ளது. இவற்றைப்பற்றிச் செய்திகளை வெளியிடவோ அல்லது அன்புற்றவர்களின் செய்திகளைக் கேட்கவோ எவரும் இல்லை. அரச நிர்வாகங்க ளில் கடமை புரியும் தமிழர்கள் கூட தங்கள் நாளாந்த பாதுகாப்பை மட்டுமே கருத்தில் கொண்டு வாழ்கிறார்கள்.

திருமலை நகரின் மத்தியில் உள்ள அரை மைல் சுற்றளவுப்பிரதேசத்தில் மட்டும் தமிழர்கள் தமது நாளாந்த வாழ்க்கையைச் சாதாரணமாகக் கழிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இவர களுக்கும் ஏனைய தமிழ் மக்களுக்கும் இடையே எந்த விதமான தொடர்புகளும் இல்லை. தமிழ் மக்கள் பாரம்பரியமாக விவசாயம் செய்து வந்த நிலங்கள தற்போது சிங்கள இராணுவத்தால் விவசாயம செய்யப்படுகிது. இங்குள்ள தமிழ் மக்களின முக்கியமான தொழில் எனக் கருதப்படும் மீன்பிடித் தொழிலும் சிங்களவர் களால் மட்டுமே செய்யப் பட்டு வருகின்றது. அவர்களது வள்ளம் மீன்பிடி வலை போன்ற ஏனைய மீன்பிடிச்சாதனங்களும் அபகரிக்கப்பட்டு வருகின்றது.

எஞ்சியிருக்கும் தமிழ் மக்களில் பெருந்தொகை யான இளம் பெண்கள் இராணுவ நடவடிக்கை களால் விதவைகளாக்கப்பட்டுள்ளார்கள். சிங்கள இராணுவம் தமது பாதுகாப்பிற்காக மக்களைக் காப்பாற்றுவது என்ற பெயரில் வீடுகள் குடிசைகள் என்பவற்றை எல்லாம் எரித்து இப்பெண்கள் வாழும் அகதி முகாம்களுக்கு அண்மையாக தங்கள முகாம்களை அமைத்துள்ளனர். இந்தச் சூழ்நிலையில எந்த வித பாதுகாப்பும் அற்ற இந்த அப்பாவிப் பெண்களின் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை நாம் ஊகிக்க முடியும்.

இராணுவ அட்டுளியத்தின் போது தனது இளம் கணவனை இழந்த ஒரு விதவைப் பெண் தனது சோகக் கதையை இவ்வாறு கூறினார்."வயலில் வேலை செய்யும் கணவன் வேலைக்குச் செல்லும் பொழுது தனக்குரிய உணவைக் கொண்டு சென்று வருவதுண்டு. ஒருநாள் போராளிகள் குழுவைச சேர்ந்த இருவர் தன் கணவனிடம் வந்து தமது பசியைப் போக்க உணவு கேட்டனர். அடுத்த நாள கணவன் போகும் போது மேலதிகமாக உணவைக் கொண்டு சென்று அவர்களுக்குக் கொடுத்தார். கணவன் இல்லாத சமயத்தில் வேறு இரண்டு தமிழ் இளைஞர்கள் வீட்டுக்கு வந்து மற்றவர்களுக்கு உணவ கொடுப்பது போல் எங்களுக்கும் ஏன் உணவு செய்து தர முடியாது எனக் கிண்டல் செய்து தன்னுடன தகாத முறையில் நடக்க முயற்சித் தனர். பக்கத்தவர்களின் தலையீட்டினால் அந்த இளைஞர்கள் போய் விட்டனர். அன்றிரவு தானும் தனது கணவனும் தூங்கிக் கொண்டு இருக்கும் வேளையில சிங்கள இராணுவம் கூரையைப் பிரித்து உட்புகுந்து தனது கணவனுக்கு முன்பாகவே தன்னைக் கற்பழித்ததோடு விட்டு விடாமல் தன் கணவனையும வெட்டிக் கொன்றார்கள் எனக் கூறினார். இதே போன்ற பல பெண்களின் சோகக் கதைகளை நேரில சென்று வந்தவர்கள் கேட்டார்கள். அரசு சார்பற்ற பல நிறுவனங்கள் அகதிகளுக்கு உதவி செய்கின்ற போர்வையில் பல மோசடிகளையும் செய்வதாகக கூறப்படுகின்றது.

உதவி அளிக்கும் ஸ்தாபனங்களில் கடமையாற்றுபவர்கள் தங்கள் உயிர்ப்பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க எவரும் இல்லை என்பதனால பல இடைத்தரகர்களை வைத்துக் காரியங்களைச செய்ய முயற்சிக்கிறார்கள்.இந்தத் தரகர்களின் செயல் களினால் அகதிகளுக்குச் சேர வேண்டிய உதவிகள கூட உரியவாறு சேர்வதில்லை என சொல்லப்படு கின்றது. அங்குள்ள தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்த எந்தவொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் இல்லாத படியால் சிங்கள அரசு எவ்விதத் தடையுமின்றித் தனது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை வெகு சாமர்த்தியமாகச் செய்து கொண்டிருக்கிறது.

ஹபரணையில் இருந்து கந்தளாய் வரையி லான பிரதான பாதையின் இரு மருங்கிலும் சுமார் அரை மைல் அகலத்திற்குக் காடுகள் அழிக்கப்பட்டு

தொடர்ச்சி 10 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியில் கை வைக்கும் முதல் அமைச்சர்

தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி செய்த காலத்திலும் சரி அதன் பிறகு அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி எம.ஜி ஆர் ஆகியோரின் திமுக - அதிமுக என்பன ஆட்சி செய்த காலத்திலும் சரி ஈழத்துத் தமிழ் மாணவர்கள் தம் படிப்பைத தமிழகக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தொடர்ந்து வந்தமை யாவரும் அறிந்த ஒன்று.

இலங்கையில் தரப்படுத்தல் முறை சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து தமிழகத்தில் கல்வியை மேற்கொண்ட ஈழத்தமிழ் மாணவர களின் தொகை பல நூறு மடங்கு அதிகரித்தது. பெருந்தொகையான பணத்தைச் செலவளித்தனர ஈழத்த மிழ்ப் பெற்றோர தம் பிள்ளைகளின எதிர்காலத்திற்காக!

அங்கு படித்த எம் பிள்ளைகளும் தமது திறமையால் நல்ல புள்ளிகளைப் பெற்று முன்னணி யில் திகழ்ந்தனர். அப்பொழுதெல்லாம் தமிழக கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களிலும் கல்வி கற்பதில் எவ்வித சிரமங்களும அங்கும் அவர்களுக்கு இருந்ததில்லை.

ஆனால் முன்னாள் இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து தமிழகத தையே எல்லாவற்றிற்கும் நம்பியிருந்த எமது மக்களின் நம்பிக்கையில் மண் விழுந்தது. அங்கு அகதிகளாகச் செல்பவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. அங்குள்ள அகதிகளான ஈழத்தமிழ் மாணவர்கள் நிலையும் பரிதாபத்திற்குரியதாகி விட்டது.

திரு ராஜீவ் காந்தியின் கொலையைத தொடர்ந்து இடம் பெற்ற தேர்தல் முடிவுகள எதிர்பாராத விதமாக செல்வி ஜெயலலிதாவை ஆட்சியில் அமர்த்தியது. மக்கள் முன் சரியான கொள்கைகளையும் திட்டங்களையும் முன் வைக்காமல வெறும் ராஜீவ் அலையால் பதவியைக் கைப்பற்றிய ஆட்சியைத் தமிழக மக்கள் வெறுக்கப் தொடங்கி விட்டனர். தனது ஆட்சி ஆட்டங்காணுவதை உணர்ந்த செல்வி ஜெயலலிதா தமிழக மக்களைத திசை திருப்புவதற்காக புலிகள் இயக்கத்தைத தடை செய்ததுடன் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள அப்பாவி ஈழத் தமிழர்களையும் அவர்கள் தம பிள்ளைகளின் கல்வியையும் தொடர முடியாத அளவிற்கு தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

தமிழர் தமிழினம் என்ற உணர்வு எதுவும அற்ற அவரது ஆட்சியில் பெருந்தொகையான ஈழத்தமிழ் மாணவர்கள் கல்வி பெற முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

எமக்குக் கிடைத்த தகவல் ஒன்றின்படி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ் வளாகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரு மாணவனை யாழ்ப்பாணத்தில இருந்து தமிழகம் அழைத்து வந்து அங்கே படிப்பை மேற்கொள்ள வைக்க முயன்ற பெற்றோ ருக்கு ப் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த மாணவனுக்குப் பலத்த சிரமத்தின் மத்தியில கல்லூரி ஒன்றில் படிக்க அனுமதி கிடைத்தது. பரீட்சையில் அதிகமான புள்ளிகளைப் பெற்ற அந்த மாணவனுக்கு பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட டுள்ளது. இலங்கைத்தமிழ் மாணவர்களுக்குக் குறிப்பாகத் தமிழகப் பல்கலைக்கழகங்களில அனுமதி வழங்கக்கூடாது என்று தமிழக கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளதாம். இதனால் அந்த மாணவன் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருப்ப தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சொந்த மண்ணிலும் சரி தஞ்சம் கோரிய மண்ணிலும் சரி அந்த மாணவன் அநாதையாக்கப்பட்டுள்ளதாகத தெரிகிறது. இதே போன்று பெருந்தொகையான ஈழத்தமிழ் மாணவர்கள் தமிழகத்தில் இக்கதிக்குள் ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி ஜெயலலிதாவின் இக்குரோதமான போக்கையிட்டு ஈழத்தமிழர் நலனில் அக்கறை கொண்ட பல அமைப்புக்கள் தம் பலத்த கண்ட னத்தைத் தெரிவித்துள்ளனர்.

## பிரிட்டனின் போக்குக் குறித்து ஜேர்மன் கண்டனம்

ஐரோப்பிய சமுக நாடுகளின் நடப்பு ஆண்டு தலைமைப் பதவியை பிரிட்டன் பெற்றுள்ளது. சென்ற மாதம் தொடக்கம் தலைமைப் பதவியை ஏற்ற பிரிட்டனின் போக்குப் பற்றி ஜேர்மனி அரசின் அமைச்சரவையில் விமர்சனம செய்யப்பட்டு கண்டனமும் தெரிவிக்கப்பட்டது. பொருளாதார சமுகத்தின் நலன் கருதாது தமது சொந்த நலன் கருதி மட்டும் இயங்க ஆரம்பித்து இருக்கிறது எனத் தெரிவித்துள்ளது. யூகோசிலாவாக்கியாவில் இருந்து வெளியேறும பெரும்பாலான பொஸ்னியா அகதிகளை ஏற்பதற்கும் அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதிலும் பிரிட்டன் அசமந்த போக்கைக கொண்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## பிரான்ஸ் நகரமொன்றில் புலம பெயர்ந்த அகதிகளுக்கெதிரான வாக்கெடுப்பு

வட பிரான்ஸ் நாட்டின் கொட்மவுத் ( Hautmont) என்ற நகரத்தில் அதன் நகர முதல்வரினால இனவாதத்தைத் தூண்டும் விதத்தில் வாக்கெ டுப்பு ஒன்று நடாத்தப்பட்டது. 90 வீதமானோர் இவ்வாகெடுப்புக்கு ஆதரவு அளித்தனர். 60 வீதமானோர் புலம் பெயர்ந்தோருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக வாக்களித்த னர். இந்நகரத்தில வாழ்கின்ற 18வீதத்திற்கும் அதிகமானோர் கறுப்பு இன மக்களாவார். இந்த வாக்கெடுப்பில் மேலும புலம் பெயர்ந்தோரை உள்ளே அனுமதிப்பது என்பது பற்றி அபிப்பிரா யம் கேட்கப்பட்டது. இவ்வாக்கெடுப்புக்குப் பிரான்ஸ் நாட்டு அரசும மற்றைய ஸ்தாபனங்க ளும் எதிரிப்பையும கண்டனத்தையும் தெரிவித் துள்ளன. நாட்டின் இன ஒற்றுமைக்கு எதிராக இந்த நகர முதல்வர் ஈடுபடுகிறுர் என்றும் இவ ருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் முயற்சி செய்யப்படுவதாக அறியப்படுகிறது.

## பிரிட்டன் கத்தோலிக்க சபையின் மகஜர்

பாராளுமன்றத்திற்கு வரவிருக்கும் பிரித்தானியா அரசின் " தஞ்சம் சட்டமூலத்திற்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொண்டு வரும் பிரிட்டன கத்தோலிக்க குருமார் சபை. உள்நாட்டு அலுவல்கள் செயலாளர் திரு கெனத் கிளாக்கை சந்தித்து சட்டமூலத்தில் இடம் பெறும் விடயங்கள் குறித்து உரையாடினுர். சென்ற மாதம் 22ம் திகதி நடைபெற்ற இச்சந்திப்பை இந்த சட்டமூலத்தைக கொண்டு வருவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட சகல அமைப்புக்களின் ஆலோசனையைக் கேட்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

## அகதிகள் சாசனம் அறிமுகம்

பிரித்தானிய அகதிகள் பணியகமும் டென்மார்க் அகதிகள் பணியகமும் ஒன்றிணைந்து ஐரோப்பா விற்குரிய அகதிகள் சாசனமொன்றைத் தயாரித துச் சமர்ப்பிக்க இருக்கிறது. ஐரோப்பிய சமூகத்தின் தற்போதைய பிரித்தானியாவின தலைமைத்துவத்தைப் பாவித்து இச்சாசனத்தை அமுல் செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. புகலிடம் தேடி வருபவர்கள் விடயத்தில் அணுக வேண்டிய முறைகள் கொண்ட 10 கட்டளைகள் அடங்கிய இந்த சாசகம் பற்றி விரைவில் உத்தியோ கபூர்வமாக விரைவில் வெளிப்பட இருக்கிறது.

## "சீக்கிய விடுதலை ஆதரவாளர்களின் புகலிடம் மறுபரிசீலனை"

இந்தியாவில் இருந்து 1971ம் ஆண்டில் சட்டவிரோ தமாக இந்த நாட்டுக்குள் நுழைந்த திரு சகால்தாரம் இல் என்பவருக்கு நிரந்தர விசா வழங்கபப ட்டு இருந்தது. இந்தியாவில சீக்கியருக்குத் தனி நாடு அமைக்கும போராட்டத்திற்கு ஆதரவு தந்து பிரித்தானியாவில் பிரசாரம் செய்து வந்தார இவரின் நடவடிக்கைகள் பிரித்தானியாவின் நலனுக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் எனக் கூறி இரண்டு வருடங்களுக்கு முன்பு நாடு கடத்தப்பட வேண்டுமெனக்கூறி மறியலில் வைக்கப்பட்டார். இவருக்குச் சார்பாக இரண்டாவது உயர் மன்றத்தில் தாக்கல செய்யப்பட்ட மனுவை அடுத்து அவருக்குத் தனது முறையீட்டை விசாரிக்க அனுமதி வழங்கியதுடன அவரை மறியலில் இருந்து செல்ல அனுமதிக்க வேண்டுமென்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்து உள்ளது.

## சின்னமாமி..... நித்திக்கு அகதியின் கௌரவம்

ஈழத்து வரலாற்றில் முதன் முதலில் தமிழ் மொழி யிலும் பொப் இசை பாடலாமெனக் கடந்த 25 வருடங்களுக்கு முன் நிருபித்துக் காட்டியவர் திரு நித்தி கனகரத்தினம். இலங்கை வானெலியில் பொப் இசைப் பிதா எனப் பட்டம் சூட்டப்பட்டு பி.பி.சி உட்படப் பல உலக நாடுகளின் வானெலி களிலும் தொலைக்காட்சிகளிலும் இவருடைய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவர் பாடிய பல பாடல்கள் சிங்களம், மலே, சீன போன்ற மொழிக ளில் மொழி பெயர்க்கப்பட்டு ஒலிப்பதிவு நாடாக களாக வெளியிடப்பட்டுள்ளன.

இங்கும்

ஈழத்தில் யாழ்ப்பாணத்தைப பிறப்பிடமாகக் கொண்ட இவர இப்பொழுது அவுஸ்திரேலியா மெல்போனில் வாழ்ந்து வருகிறுர். இலங்கையில் தற்போது தமிழர்களுக்கெதிராக நடக்கும் அட்டுழி யங்களையும் மனித உரிமை மீறல்களையும் பற்றி அவுஸ்திரேலியாவில் பிரச்சாரம் செய்யும் முக்கிய ஒருவராக இருப்பதுடன் பிரபல மனித உரிமைப் பிரச்சாரகர் திரு சி.ஐ.எலியஸசர் அவருடன் சேர்ந்து பல பொதுப்பணிகளைச் செய்து வருகின் றுர். இவரது முதலாவது பொப இசைப்பாடலான " சின்ன மாமியே" இன் 25ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு உலக நாடுகளில் இடம் பெறும் பல விழாக்களில் கலந்து கொள்ளும் பொருட்டு தற்போது பிரித்தானியாவில் தங்கி இருக்கிறுர். அகதியின் பத்திரிகையின் ஏற்பாட்டில செப்டெம்பர் மாதம் இடம் பெறவிருக்கும் " சின்ன மாமி" பாடலின் 25வது நிறைவு இன்னிசை நிகழ்ச்சியில் அகதியின் சார்பில் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட இருக்கிறுர். ஈழத்தில கலைத்துறையில் ஈடுபட்ட பல பிரமுகர்கள்கலந்து கொள்ள இருக்கும் இந்நிகழ்ச்சியில் நித்தி உட்பட இலங்கை வானெலி மெல்லிசைப் பாடகர் திரு மா.சத்திய மூர்த்தி உடன் வேறு பலரும் கலந்து கொண்டு பாட இருக்கிறுர்கள். நித்தியின் பல பழைய, புதிய பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவ நாடா ஒன்றையும் விழாவில் அகதியினுல வெளியிடப்பட இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் புகலிடம் வரலாறு

– க. சிறிதரன் –

தொடர் கட்டுரை

சென்ற இதழில் ஒருவர் தனது இனம் அல்லது மதம் அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகச சூழலைச் சேர்ந்தவர் அல்லது அரசியல அபிப்பிராயம் கொண்டவர் என்ற காரணத்தால் பாதிக்கப் பட்டிருந்தாலோ அல்லது பாதிக்கப்படலாம் என்ற நியாயமான பயம் கொண்டிருப்பதாலோ பிற நாடொன்றில் இருந்து அத்தகையவர் அரசியல் புகலிட விண்ணப்பத்தை மேற்கொள்ள தகுதியுடையவர் என்று பார்த்தோம். இக்கட்டுரையில் அத்தகைய ஒருவர் எந்த விதமான பயம் கொண்டிருக்க வேண்டுமென அல்லது நியாயமான பயம் எனப்படுவது எத்தகையதாய் இருக்க வேண்டும் என்பதனை பார்ப்போம்.. இவ்விடயம் பல நீதிமன்றத் தீர்ப்புக்களால் காலத்திற்குக் காலம் பாதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக அரசியல் புகலிட விண்ணப் பத்தை மேற்கொள்ளுபவர் தனது நாட்டில் பாதிக் கப்பட்டிருந்து அல்லது பாதிக்கப்படுவேன் என்ற நியாயமான பயம் காரணமாகத் தன் நாட்டை விட்டு வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய பயம் அவர் நாட்டை விட்டு வெளியேறும போது இல்லாமல் இருப்பினும் பின் தன் நாட்டை அடைந்த பின்னர் அப்பயம் காரணமாகத் தன் சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல முடியாது இருப்பின் அத்தகையவரும் அரசியல் புகலிட விண்ணப்பத்தை சமர்ப்பிக்கத் தகுதியுடை யவர் ஆவார். பிரித்தானியாவில் உள்ள மாணவர்களாக அல்லது விருந்தினராக அல்லத வேறு அடிப்படையில் உட்புகுந்து பின்னர் அரசியல புகலிட விண்ணப்பங்களைப் பலர் விண்ணப்பிக்கிறார்கள். மேலும் சிலர் தாங்கள் பிரித்தானியாவினுள் வந்த பின்னர் இங்கிருந்து கொண்டு தன சொந்த நாட்டிற்கு எதிராக மேற் கொள்ளும் சில நடவடிக்கைகளால் தன் சொந்த நாட்டிற்குப போக முடியாமல் உள்ளது என்ற அடிப்படையில் அரசியல் புகலிட விண்ணப்பங்களை இங்கு மேற கொள்ளுவதுண்டு. ஆனால் இத்தகைய விண்ணப்பங்கள் அதிகாரிகளினால் சந்தேகக் கண்ணோடு பார்க்கப்படுவதோடு பெருமளவில் நிராகரிக கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் ஒருவர் அரசியல் புகலிட விண்ணப்பத்தை புகலிடம கோரும் நாட்டில் விண்ணப்பித்த பின் அவரின விண்ணப்பம் பரிசீலனைக்க எடுத்துக் கொள்ளப்படும் போது அவர் தன் நாட்டில் எந்த விதமாக ஜெனிவா உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஓர் காரணத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்று பார்ப்பதோடு மட்டுமல்லாமல் அவர் எதிர்காலத்தில் என்ன பாதிப்புகளுக்கு தன் நாட்டில் உட்படுத்தப்படுவார் என்பதும் கருத்தில் கொள்ளப்படுகிறது. அரசியல் புகலிட விண்ணப்பத்தை மேற்கொள்ளும் ஒருவர் தான எவ்வளவு தூரம் பாதிக்கப்படுவேன் என்று நிருபிக்க வேண்டிய விடயம் உள்நாட்டு விவகார அமைச்சர் எதிர் சிவகுமாரன் என்னும் இலங்கைத் தமிழர் ஒருவரின் மனுவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் ஒருவர் தான் தன் சொந்த நாட்டில் பாதிக்கப்படுவேன் என்று 10வீதம் நிருபித்தாலே போதுமானது என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இங்கிலாந்தில நீதிமன்றங்கள் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளும என்றும் கருத்து வெளியிட்டிருக் கிறார்கள்.

மேலும் அரசியல் புகலிட விண்ணப்பம கோரிய நாட்டிலிருந்து தன் சொந்த நாட்டிற்கு ச சென்ற பின்னர் அச் சொந்த நாட்டில் இருந்து கொண்டு தான் மேற்கொள்ள விருக்கும் ஏதாவது ஒரு நடவடிக்கையின மூலம் தான் பாதிக்கப்பட நியாயமான சந்தர்ப்பம் உண்டு என்ற ரீதியில் மட்டும அரசியல் புகலிட விண்ணப்பத்தை மேற்கொள்ள முடியாது. இலங்கையரான மெண்டிஸ் என்பவர் இந்த அடிப்படையில் இங்கிலாந்தில் அரசியல புகலிட விண்ணப்பத்தை மேற்கொண்டு அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அவர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஓர் நாட்டில் உள்நாட்டு யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அத்தகைய யுத்தத்தில் இருந்து தப்புவதற்காக அந்த நாட்டை விட்டு வெளியேறி இன்னோர் நாட்டில் அரசியல் புகலிட விண்ணப்பத்தை ஒருவர் கோரினால அத்தகைய விண்ணப்பம் ஜெனிவா உடன்படிக்கையின் அடிப்படையில் அதில் கைச்சாத்திட்ட நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஆயினும் ஒரு குறிப்பிட்ட நாட்டில் அந்த நாட்டின் அரசாங்கமானது அந்நாட்டிலுள்ள ஒரு பகுதி மக்களை இனம், மதம், அல்லத ஒரு குறிப்பிட்ட அரசியல் அபிப்பிராயம் கொண்டவர்கள என்ற அடிப்படையில் அத்தகைய மக்களுக்கு எதிராக சட்டரீதியானதும் பாரதூரமானதுமான நடவடிக்கைகளை எடுப்பின் அத்தகைய செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்படலாம் என்ற நியாயமான பயம் கொண்டுள்ள

தொடர்ச்சி 11ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருக்குலைந்த ........... திருமலை

7ம் பக்கத் தொடர்ச்சி.......

குடிசைகள் அமைத்துச் சிங்களவர்களை குடியேற்றி உள்ளார்கள். இவ்வாறே தம்பலகாமம், நிலாவெளி, குச்சவெளி போன்ற இடங்களில் ஒவ்வொரு மைல தூரத்திலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு அதன் சுற்றுடல்களில் சிங்களவர்களை மீளவும் புதிதாகக் குடியமர்த்திப் பாதுகாப்பும் வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். சுமார் 70 இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்ட அதே சமயத்தில் பல நூறு புத்த விகாரைகளை உருவாக்கியுள்ளார்கள். கோணேஸவரர் ஆலயத்துடன் தம்பலகாமம் , கந்தளாய், சாம்பல் தீவு, போன்ற இடங்களில் உள்ள ஏனைய பிரசித்தி பெற்ற ஆலயங்களும் சேதமாக்கப்பட்டு பராமரிப்பு அற்றுக் காணப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் கடந்த அரை வருட காலத்தில் சுமார் ஐயாயிரம் தமிழர்கள் சிங்கள இராணுவத்தின் நடவடிக்கைகளினால் காணாமல போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. காணாமல் போனவர்களைப் பற்றிய விபரங்களைப் பொறுத்த மட்டில் பத்து வீதமானவர்களின் தகவல்களை கொழும்பில் உள்ள அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப பட்டுள்ளன. அவர்களின் சார்பில் வாதாடவோ உதவவோ தமிழ் வழக்கறிஞர்கள் போதியளவில் இல்லை. இது பற்றிக் கொழும்பில் விசாரித்த போது சுமார் 90 வழக்கறிஞர்கள் வரை தங்கள் உயிரைக காப்பாற்ற நாட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும் அங்குள்ள ஏனைய வழக்கறிஞர்கள் இது பற்றிக் கரிசனை எடுக்கத் தயங்குவதாகவும் தெரிகிறது.

இந்நிலை நீடித்துக் கொண்டு போனால எஞ்சியுள்ள தமிழ் மக்களும் திருமலை மாவட்டத்தில் இருந்து காணாமல் போய் விடுவார்கள் என்ற அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

## அரசியல் புகலிடம்.......

10ம் பக்கத் தொடர்ச்சி.........

வர்கள் இன்னொரு நாட்டில் அரசியல் புகலிட விண்ணப்பத்தை மேற்கொள்ளத் தகுதியுடையவர்களாகிறார்கள்.

முன்னர் குறிப்பிட்ட சிவகுமாரன் என்பவரது வழக்கில் சிவகுமாரனும் இன்னும் நால்வரும் பிரித்தானிய விமானமொன்றில் வந்திறங்கி அரசியல் புகலிட விண்ணப்பங்களை மேற்கொண்டார்கள். அவர்களின் விண்ணப்பங்களை நிராகரித்த உள்நாட்டு விவகார அமைச்சர் அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப உத்தரவிட்டார். அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட பின்னர் அவர்கள் மேற்கொண்ட மேன முறையீட்டைப் பரிசீலித்த மத்தியஸ்தர் (Adjudicator) இலங்கையில் தமிழர்களுக்கெதிராகப் பல காலமாக இன ரீதியான பாரபட்சம் காட்டப்படுவதாயும் அரச படைகளால் தமிழர்களுக்கெதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாயும் இத்தகைய நடவடிக்கைகள் ஒரு நாட்டின் உள் நாட்டு யுத்தத்தைத் தடுக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாய் கணிக்கப்படலாகாது என்றும் திருப்பி அனுப்பப்பட்ட சிவகுமாரனும் மற்ற நால்வரும் இலங்கையில் அவர்களின் இனம், மதம், அல்லது அரசியல் அபிப்பிராயம் காரணமாகப் பாதிக்கப்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டென்றும் அவர்கள் திரும்பவும் பிரித்தானியாவினுள் அழைக்கப்பட வேண்டும் என்றும தீர்ப்பளித்தார். இதன் பின்னர் சிவகுமாரனும் மற்றைய நால்வரும் பிரித்தானியாவுக்கு அரசால அழைத்து வரப் பட்டார்கள். இம் முறையீட்டுக்குப் பின்னர் பிரபுக்கள் சபையிலும் ஐரோப்பிய நீதிமன்றத்திலும் வாதிட்ட போதிலும் சிவகுமாரனும மற்றையவர்களும் பிரித்தானியாவில் தொடர்ந்து வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொடரும்



தமிழ் அகதி நிலையத்தின் மகளிர் அணியினால் அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்ட உணவு செய்து காட்டல் நிகழ்ச்சியின் போது எடுக்கபட்ட படம்

### சுவிஸ் அரசு தமிழ் அகதிகளைத் திருப்பிஅனுப்புமா?

சுவிஸ் அரசாங்கம் இலங்கைத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதாக பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகளை அடுத்து உண்மை நிலையினை அறிய அகதியுடன் பலர் தொடர்பு கொண்டனர். நாம் இது பற்றி உரிய அதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது, சுவிஸ் அரசு இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது சம்பந்தமாக இது வரை எவ்வித முடிவும் ஏடுக்கவில்லை. ஜெனிவா அகதிகள் சாசனத்தின் படி சகல அகதிகள் பற்றிய பிரச்சனைகளும் கையாளப்படும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. மேலும் இது பற்றி விபரங்கள் அகதிக்குக் கிடைக்கும் பட்சத்தில் அகதியில் பிரசுரிக்கப்ப டும் - ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் பக்கம்

தயாரிப்பு - புவனா

## சமையற் குறிப்பு

ரவை இட்லி

தேவையான பொருட்கள்

(8 பேருக்குப் போதுமானது)

3 கப் ரவை

1 கப் உடைந்த கறுப்புப் பூந்து

2 பெரிய வெங்காயம்

5 பச்சை மிளகாய்

கறிவேப்பிலை

அரை தேக்கரண்டி அப்பச்சோடா

இஞ்சி சிறிதளவு

உப்பு தேவையான அளவு

செய்முறை

உழுந்தை நன்கு ஊற வைத்து தோல் நீக்கிக் கழுவி கிரைண்டரில் ( Grinder ) அரைப்பதத்திற்கு அரைத்து அதனுடன் வெட்டிய வெங்காயம பச்சை மிளகாய், கறிவேப்பிலை, இஞ்சி யாவற்றையும் சேர்த்து நன்கு அரைக்கவும். ரவையை (20 நிமிடங்களுக்கு ) நன்கு அவித்து உழுந்தைக் கலவையுடன் நன்கு கலந்து வைக்கவும். உப்பு, அப்பச் சோடாவையும் இக்கலவையுடன் கலந்து நன்கு புளிக்க வைக்கவும். புளித்ததும் இட்லிச்சட்டியில அவித்து சட்னி அல்லது சாம்பாருடன் பரிமாறவும்.

வி.சுலோசனா

## வீட்டுக் குறிப்புகள்

➡ கட்டியாக இருக்கும் பட்டரை உடனே கேக் செய்வ தற்குப் பாவிக்க வேண்டுமானால கொதிநீரில் நனைத்து ஈரத்துணியால் ஒரு மணித்தியாலம் பட்டரைச் சுற்றி வைத்துப் பின பாவித்தால் மெதுமையாக இருக்கும்.

➡ இஸ்திரிப் பெட்டியின் அடிப்பாகத்தில் அழுக குப் படிந்தால் சற்று சூடாக இருக்கும் பொழுது ஒரு ஈரத் துணியில் சிறிது அப்பசோடாவைப் போட்டு அதனால் துடைத்தால் சுத்தமாகி விடும்.

தொகுத்தளித்தவர் ப.ராதா

### நீங்களும் எழுதுங்கள்

மகளிரே!

இப்பகுதியை அலங்கரிக்க வேண்டியது உங்கள் ஒவ்வொருவரது கட்டாய கடமை. ஆகவே உங்கள ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

தொடர்பு

Magalir Pakkam
Ahathy
Tamil Refugee Centre,
256 Fore Street,
London N18 2TY


# Rajan

Universal Foods

☆ உங்களுக்கு அவசியமான அன்றாட தேவைப்பொருட்கள்

☆ இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட உணவுப்பண்டங்கள், கடல் உணவு மற்றும்

☆ மரக்கறி வகைகள் மற்றும்
Universal Music and VIdeo

மீண்டும் மீண்டும் உங்களை ஆவலுடன் கேட்கத் தூண்டும்

☆ தமிழ் சிங்கள பழைய புதிய ஒடியோ cd வகைகள்

☆ தமிழ் சிங்கள ஆங்கில சினிமா வீடியோ பிரதிகள்

☆ அனைத்து வார மாத சஞ்சிகைப் பத்திரிகைகள்

இலண்டன் நகரில் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

ராஜன்

63. Dudden Hill Lane. Willesden. London NW10 1BD
Tel: 081 - 451 7177 Fax: 081 - 459 8424


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✍ அன்புள்ள அகதிக்கு.......

### வாசகர் கடிதம்

### அகதியே நீ வளர்க!

பிறந்த நாடு விட்டு
புலம் பெயர்ந்த எமக்கு
பறந்து வந்தொரு
புதினங்கள் தந்திடப்
பிரசுரமாகும் 'அகதியே' - உனை
பணிவுடன் வாழ்த்துகிறேன்
இங்ஙனம்
க.குமரகுருபரன்
12 Fairfields Crescent
Kingsbury
London NW9 0PS

அன்புள்ள ஆசிரியருக்கு

சென்ற இதழில் லாட்டாவின் 3வது ஆண்டு நிறைவு விழா பற்றிய தொகுப்புக் கண்டேன். விழாவில் இடம் பெற்ற தொப்பிக்காரன் சிறுவர நாடகத்தில் குறிப்பிக்கூடிய எதுவும் இல்லையெனக் குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்நாடகத்தில் பங்கு பற்றி நடித்த சிறுர்கள் தமிழ் மொழியைச் சிறப பாக உச்சரித்துத் தங்கள் பாத்திரங்களைச செய்திருந்தார்கள் என்பதை நிச்சயம் அகதி போன்ற பத்திரிகை பாராட்ட வேண்டும்.

இவ்வண்ணம்
திருமதி துரைரெத்தினம்
எட்மன்ரன்

### அகதி தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

**5.00 பவுண் (U.K) அன்பளிப்பாகச் செலுத்துவதன் மூலம் அடுத்த 12 மாத அகதி இதழ்களை உங்கள் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். வெளிநாடுகளில் இருப்பவர்கள் ஆகக்குறைந்தது 4.00 பவுண்களுக்குச்சமனுன பணத்துடன் 12 இதழ்களுக்கான தபால் செலவையும் சேர்த்து அன்பளிப்பாகச் செலுத்துங்கள். அன்பளிப்பைக் காசோலையாகவோ அல்லது போஸ்டல் ஒடராகவோ கீழ்வரும பத்திரத்தையும் இணைத்து அனுப்புங்கள்.**

காசோலை மணியோர்டர் Tamil Refugee Centre என்ற பெயருக்கு அனுப்புங்கள்

## DONATION

Full Name:
Address:

Tel No:
Donation Cheque/Postal Order:

Signature                Date

Director, Ahathy/Tamil Refugee Centre, 256, Fore Street, London N18 2TY U.K.

MINIMUM DONATION INCLUDING POSTAL CHARGES

| | | | |
|---|---|---|---|
| AUSTRALIA | A$ 21.00 | CANADA | Cd$ 18.00 |
| DENMARK | Kr 80.00 | FRANCE | Fr 70.00 |
| GERMANY | DM20.00 | NETHERLANDS | Gl 23.00 |
| NORWAY | Kr 80.00 | SWITZERLAND | SFr 18.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● உங்கள் கேள்வியும்?

● நான் 91ம் ஆண்டு ஜனவரியில் இலங்கையில் இருந்து இங்கு வந்து தஞ்சம் கோரவிண்ணப்பம் செய்துள்ளேன். இதுவரை எதுவித விசாவும வழங்கப்படவில்லை. எனது வயது 18. நான் அரசாங்க உதவிப் பணத்தைப் பெற்றுக்கொண்டு இருக்கிறேன். நான் பொறியியல் முறையில் பட்டம் பெற விரும்புகிறேன். எனது கல்வியைப்பெற எனக்கு ஆலோசனை கூறவும்.

தேவன் சவுத்தோல்

● ● நீங்கள் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்த நாளில் இருந்து இந்த நாட்டில் கல்வியைப்பெற எந்த தடையும் இல்லை. ஆனால் உங்களிடம் வெளிநாட்டு மாணவருக்கான அல்லது உள் நாட்டு மாணவருக்கான கட்டணத்தை அறவிடுவது என்பது கல்லூரியைப் பொறுத்தது. நீங்கள் சமூக ஆதார இலாகாவின் விதிகளின் படி முழு நேரக் கல்வி கற்றுக்கொண்டு வருமான உதவிப்பணம் பெற முடியாது. ஆனால் ஆங்கில மொழியை வந்த நாளில் இருந்து ஒரு வருடத்திற்கு முழு நேரமாகக் கற்க விதி விலக்குண்டு. நீங்கள் பகுதி நேர கல்வியைப பெறுவதானால் பொதுவாகக் குறைந்த கட்டணத்தில பல்கலைக்கழகத்தை நாடலாம். உங்களுக்குக் குடிவரவு விதிகளுக்குப் புறம்பான வகையில் அனுமதி(விசா) வழங்கப்பட்டால் மாத்திரம் நீங்கள் உள்நாட்டு கட்டணத்தில் கல்வியைப்பெற அனுமதிப்பார்கள்.

உங்கள் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டால உபகாரப்பணத்தின் மூலம் கல்வியைப் பெற முடியும். எவ்வாறாயினும் முழ நேரப்படிப்பைப் பெறுவதானால் உமது உதவிப்பணத்தைப் பெறுவது நிறுத்தப்பட வேண்டும். மேலும் உள்ளூர் பகுதி ஆதரவுப்பணத்தைப் பெறுவதாக இருந்தால் இந்த நாட்டில் தொடர்ச்சியாக 3 வருடத்தை கழித்திருக்க வேண்டும். ஆனாலும் உள்ளூர் கல்விப்பகுதியில விருப்புரிமை மானியத்திற்கு விண்ணப்பிப்பதற்கு மேற்கூறப்பட்ட எந்த வித தகமையும் தேவையில்லை. இதைத் தவிர அகதிகளுக்கு உதவி செய்யும் பல நிறுவனங்கள் கல்விக்குரிய மானியத்தை வழங்குகின்றன. மேலதிக விபரங்களுக்கு உலக பல்கலைக்கழக சேவைப்பகுதி(World University Service) க்கு தொடர்பு கொள்ளவும்.

முகவரி
World University Service
20 Compton Terrace London N1 2UN

● ● எங்கள் பதிலும்..


அகதி பத்திரிகையின் வளர்ச்சிக்கு எமது ஆசிகளும் பங்களிப்புக்களும்

# நியூ அம்பிகா சுப்பர் மார்க்கட்

(ஆர்ச்வே முருகன் ஆலயத்திற்கு அருகில்)

* இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பலசரக்கு, உணவுப்பண்டங்கள் ,கடலுணவு, மரக்கறி வகைகள், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கும்
* தமிழ், சிங்கள, ஆங்கில வாராந்த மாதாந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள்
* வீடியோ, ஒடியோ, கொம்பக்ட் டிஸ்க்
* இலங்கை மதுபானங்களுடன் சகல விதமான குடிவகைகள்
* திருமணம் மற்றும் மங்களகரமான வைபவங்களுக்கான மணவறை, மணமக்கள் அணிகள் உட்பட சகல விதமான தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

## NEW AMBIHA SUPERMARKET

198, ARCHWAY ROAD
HIGHGATE, LONDON N6 5BB
Tel & Fax: 081 - 348 3356

கோயில் பூசைக்குத் தேவையான சகல விதமான பூஜைப் பொருட்களுடன் பூமாலைகள் செய்து தரப்படும்

வியாபார நேரம்
MON - SAT: 8.30 AM - 11.00 PM SUN: 9.30 AM - 10.30 PM




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் கைவண்ணம்

# நாருள்ள உணவின் அவசியம்

பல நூற்றுண்டு காலமாக மனித வர்க்கத்தினர் பெரும்பாலும் தாவர வகைகளையே உட்கொண்டு வந்துள்ளனர். அத்தாவர உணவின் முக்கிய பகுதியாக நார் - உணவு அல்லது நாருள்ள உணவ ஆகும். நார்களில் முக்கிய பங்கேற்பது செலுலோசாலான (Cellulose) தாவரக்கலங்களின கலச்சுவர்களாகும். மற்றைய பகுதி செலுலோசு கலச்சுவருக்கு ஆதரவாக இருக்கும் லிக்னின்(Lignin) ஆகும். மூன்றுவது பங்கை வகிக்கும் பெக்ரின்(Pectin) எனப்படும் பகுதி பெரும் பாலும் எல்லாப் பழுத்த பழங்களிலும் காணப்படு கிறது.

மக்களின் உணவு முறை இன்று பல மாற்றங்களை அடைந்து விட்டன. நாம் உட்கொள்ளும் உணவில் உள்ள நார்கள் பல முக்கியமான நோய்கள் வராமல் தடுக்க உதவி புரிகின்றது. அவற்றில் சில மலச்சிக்கல், குடல் வீக்கம், மூலவியாதி குடற்புற்று நோய், என்பனவாகும். அத்துடன் நார்கள் அற்ற உணவை உண்பதால் உடற்பருமன் கூடுவதுடன இரத்த அமுக்கம் கூடி இருதயத்திற்கு கடுமையான வேலை ஏற்பட்டு இருதய நோய் வர வாய்ப்பளிக்கிறது. இந்நோய்கள் எம்மை அணுகாமல் பாதுகாக்க வேண்டுமாயின் நாம் எமது அன்றட உணவில நார்கள் கூடிய உணவு வகைகளைச் சேர்த்துக கொள்ள வேண்டும்.

உணவில் உள்ள நார்கள் சமிபாடு அடையவோ குடலில் உறிஞ்சப்படவோ மாட்டாது. இதனைக் கரையக் கூடிய நார்கள், கரைய முடியாத நார்கள் என இரண்டு வகைப்படுத்தலாம். கரையாத நார்கள் சமிபாடடையும் உணவு குடலில் செல்லும வேகத்தைக் கூட்டுவதுடன் சமிபாடுணவின் பருமனையும் கூட்டுகின்றது. அத்துடன் கழிவுணவு நீண்ட நேரம் குடலில் தங்கியிருக்காமல் இலகுவில் வெளியே வர உதவுகிறது. இந்த இயல்புகள் உடலில புற்று நோய் வர ஏதுவாக உள்ள காரணிகள் அதிக நேரம் குடலில் தொடர்ந்து இருந்து தாக்கி புற்று நோய் வருவதிலிருந்து எம்மைக் காக்க உதவுகிறது.

பழ வகைகளிலும் மரக்கறிகளிலும் உள்ள கரையக்கூடிய நார்கள் குளுக்கோஸ் குடலில் இருந்து இரத்தத்திற்கு உறிஞ்சப்படுவதைத் தாமதப்படுத்துகிறது. இவ்வியல்பு கூடிய குளுக்கோஸ் இரத்தத்தில இருந்து ஏற்படும் சலரோகத்தைத் தடுக்க உதவுவதுடன் சலரோகம் உள்ளவர்கள் எடுக்கும இன்சுலின் அளவைக் குறைக்கவோ அல்லது முற்றுகத் தவிர்க்கவோ உதவுகிறது. மேலும் நாம உணவுடன் உட்கொள்ளும் கரையக் கூடிய நார்கள் கொலஸ்டரோலுடன் இணைந்து மலத்துடன வெளியேறுவதன் மூலம் உடலில் கொலஸ்டரோல் உறிஞ்சப்படுவதைக் குறைத்து அதனுல் ஏற்படும இருதய நோய் மற்றும் பித்தப்பையில் ஏற்படும பித்தக்கல் ( Gall stones) உண்டாவதைக் குறைக்க உதவுகிறது. பெரும்பான்மையாஞேர் இறைச்சியைத தவிர்ந்த மற்றைய எல்லாச் சுத்திகரிக்கப்படாத (தவிடு நீக்கப்படாத) உணவுகளிலும், பழவகைகளிலும், மரக்கறி வகைகளிலும் இருந்து தேவையான நாருணவைப் பெற்றுக் கொள்ளலாம்.

சாதாரணமாக வளர்ந்த ஒரு நபருக்கு தினசரி ஏறக்குறைய ஒரு அவுன்ஸ் அல்லது 30 கிராம் நார் உணவு தேவைப்படுகிறது. கீழ்த்தரப பட்டுள்ள அட்டவணையில் நாருணவின் விபரங்கள தரப்பட்டுள்ளன.

அதிகளவு நாருள்ள உணவுப் பொருட்கள் - சமைத்த அல்லது உடன் மரக்கறி வகைகள்(தவிடு நீக்காதவை) கோதுமை அரிசிஇ பார்லி அரிசி, வரகு, குரக்கன், சாமி, பச்சை நிறப் பட்டாணி, உருளைக்கிழங்கு, புழுங்கல் அரிசி( தவிடு நீக்காதவை) பழ வகைகள்(உடன் பழ வகை) பதப்படுத்திய பழ வகை தவிட்டுப்பாண் போன்றவை

குறைந்த நாருள்ள உணவுப் பொருட்கள் - முற்றுகத் தவிடு நீக்கிய தானிய வகைகள், வெள்ளை அரிசி, வெள்ளைக் கோதுமைமா, வெள்ளைப் பாண், வெண்ணெய், முட்டை, மீன், இறைச்சி விசுக்கோத்து போன்றவை. -ஆக்கம் - ஜெயந்தி மகேந்திரா

---

### இதயம் கனக்கிறது

அனைத்தும் இழந்ததிஞல்
அகதியென்றுனேம் - எம்
மனதில் எதையும் இழக்கவில்லை
மறந்து வாழ்வதற்கு
இனத்தின் இன்னல்கள்
இன்னமும் தொடர்கையில்
கனக்கிறது இதயம்
கண்ணீரில் வாழும் சோதரர்க்கு
- கே.குமரகுருபரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி பத்திரிகையின் ஏற்பாட்டில்

சர்வதேசப் புகழ் பொப்பிசைப் பிதா நித்தி கனகரத்தினம்

இலங்கை வானொலி புகழ் மெல்லிசைப் பாடகர் மா.சத்தியமூர்த்தி

இலண்டன் புகழ் மெல்லிசைப் பாடகி குகனேஸ்வரி இராஜரெட்ணம்

அகதியின் புது அறிமுகம் சிவாந்தினி நடராஜா

ஆகியோருடன்

ஈழத்து புகழ் முன்னணி இசைக்குழு

## ரெயின்போ

வழங்கும்

சின்னமாமி ....... பாடலின்

## 25 வது ஆண்டு நிறைவு

# இன்னிசை மாலை



நிகழ்ச்சித் தொகுப்பு சன்றைஸ் நடா மோகன்

ஞாயிறு 20 செப்ரெம்பர் 92 மாலை 6.00

Salisbury School Hall Nightingale Road, Edmonton N9

அனுமதி அன்பளிப்பு தனியாள் £5.00 குடும்பம் £10.00

(பத்து வயதுக்குட்பட்டோர் இலவசம்)

---

அகதியின் வளர்ச்சிக்கு எமது
வாழ்த்துக்களும் பங்களிப்பும்

# MARKANDAN & CO

SOLICITORS

Empowered to Administer Oaths

THAMIL HOUSE
720, ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

**M.Markandan LL.B.**

- ALL ASPECT OF IMMIGRATION MATTERS UP TO APPEALS TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS
- ALL TYPES OF CONVEYANCING
- LITIGATION - ALL COURTS CIVIL / CRIMINAL
- LANDLORDS/ TENANT MATTERS, MATRIMONIAL
- POLICE STATION ADVICE
- ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
- FREE ADVICE FOR 15 MINTUES ON THE FIRST ATTENDANCE,

LEGAL AID

WE ARE ALWAYS FRIENDLY,
EASY TO TALK AND KEEN TO HELP

TEL: 081 -514 8188
FAX: 081 -514 8303

---

வட லண்டன் வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி
உங்கள் மத்தியில் ஓர் புதிய வியாபார நிலையம்
இலங்கை உற்பத்திப் பொருட்கள் அனைத்தையும்
ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# சீதா ஸ்ரோர்ஸ்

256, Fore Street, Edmonton,
LondonN18 2TY

- வியாபார நேரம் - வாரத்தின் எல்லா நாட்களும் காலை 8.00 மணி- 10.00 மணி
- உங்கள் தேவைகளான இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள், மற்றும் பொருட்கள்
- இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடலுணவு, மரக்கறிவகைகள்
- தமிழ் வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள்
- வீடியோ, ஓடியோ, கொம்பக்ட்டிஸ்க்
- Fax Service available both ways.

Tel : 081- 884 4979

Fax: 081- 807 5232

*Design & Printed by Golden Printers Tel & FaX: 081 - 509 0509*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org